உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

கோ.எண்:1818/வருவாய்/உ.ந./MHFM/2024 ஜவகர் நகர், தேதி- 06-08-24

# மின்னனு ஏல அறிவிப்பு

புதுச்சேரி, லாஸ்பேட்டை, கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள உழவர்கரை நகராட்சி, நவீன சுகாதார மீன் அங்காடி தரைத்தளத்தில் உள்ள மீன் ஏல அறைக்கு ஓராண்டிற்கான உரிமம் பெற கீழ்காணும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளின் படி மின்னனு ஏலம் வாயிலாக நடத்தப்பட உள்ளது.

ஏலத் தேதி மற்றும் நேரம்: 23-08-2024, மதியம் 2.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை.

| வ. எண் | ஏல விபரம் | நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓராண்டிற்கான ஏலத்தொகை ரூ. | பிணை வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மீன் ஏல அறை | 28,05,000/- | 1,40,250/- |

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுக்கக்கூடாது.

2. ஏலம் எடுக்க விரும்பும் ஏலதாரர், மின்னனு ஏலத்தில் பங்கேற்க சரியான டிஜிட்டல் விசையை (Digital Key) வைத்திருக்க வேண்டும். மேலும், ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை வலைதளமான www.oulmun.in-ல் இருந்து பதிவிறக்கம் செய்து https://eauction.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் மேலும் அதனுடைய நகலை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்தி செய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான பிணை வைப்புத் தொகை ரூ.1,40,250/-க்கு ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்பித்தல் வேண்டும்.

4. ஏலப்படிவம் மின்னனு வலைதளத்தில் பதிவேற்றம் செய்து மற்றும் சமர்ப்பிக்கும் கடைசி நாள் 20-08-2024 மாலை 3.00 மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்கள் அரக்கு முத்திரை சீல் இடப்பட்ட உறையினில் "ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி" (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்று குறிப்பிட்டு ஜவஹர் நகர் கட்டிடத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் மீன் ஏல அறை ஏல விண்ணப்பப் படிவம் என்று குறிப்பிட வேண்டும்.

5. ஏலத்தில் கலந்துகொள்பவர் கீழ்காணும் சான்றிதழ்களை ஏலப் படிவத்துடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

   1) மூன்று ஆண்டுகளுக்கு வருமான வரி கணக்கு சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

2) பான் கார்டு நகல்.
3) ஆதார் அட்டை நகல்.
4) பிணைய வைப்புத் தொகை (EMD) ரூபாய் **-1,40,250/-**
5) உழவர்கரை நகராட்சியின் தடையில்லா சான்றிதழ்

6. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியின் வரி பாக்கியில்லா சான்றிதழ் பெற வேண்டும்.

7. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையை விட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிட வேண்டும். குறைந்தபட்சம் ஏலத்தொகை ரூ.5,000/- வித்தியாசத்தில் ஏற்றம் பெற வேண்டும்..

8. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை முழுவதையும் அதேநாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ ஒரே தவணையில் செலுத்த வேண்டும். தவறினால் அவர் செலுத்திய பிணை வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும்.

9. வெற்றி பெற்ற ஏலதாரர் பாதுகாப்பு வைப்புத்தொகையாக வெற்றி பெற்ற ஏலத்தொகையில் 10% ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ ஏலத்தின் மறுநாள் செலுத்தப்படவேண்டும். மேலும் இப்பாதுகாப்பு வைப்புத்தொகை மீன் ஏல மையத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி உரிம காலம் முடிவடைந்த பிறகு திருப்பித்தரப்படும்.

10. புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட மீனவ சமுதாயத்தை சேர்ந்தவர் மீன் ஏல அறையை ஏலம் எடுத்தால் அவர்களுக்கு மட்டும் ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இந்த சலுகையை பெறுவதற்கு ஏலப் படிவத்துடன் புதுச்சேரி மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களுக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

11. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அதற்குரிய உரிமம் வழங்கப்படும்.

12. ஏலம் தொடர்பான இதர நிபந்தனைகள் மற்றும் விளக்கங்கள் பெற உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து தெரிந்துகொள்ளலாம்.

13. ஏலத்தை தள்ளி வைப்பதற்கு (அ) நிறுத்தி வைப்பதற்கு மற்றும் ரத்து செய்வதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

14. மேற்சொன்ன இடத்திற்கு ஜெனரேட்டர் பயன்படுத்தப்படின் அதற்குண்டான கட்டணம் தனியாக வசூலிக்கப்படும்.

15. வெற்றி பெற்ற ஏலதாரர் மின்கட்டணத்தை பிரதி மாதமும் தவறாமல் செலுத்துதல் வேண்டும் அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(A. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**

**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி - 05.**

**மீன் ஏல மையத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

1. நவீன சுகாதார மீன் அங்காடியில் மீன் ஏல மையத்தின் வசதியை செயல்படுத்த ஒப்பந்ததாரர் “ஏலதாரராக” இருக்கவேண்டும்.
2. மீன், இறால், நண்டு மற்றும் பிற அனைத்து மீன்களின் ஏலம் நவீன சுகாதார மீன் அங்காடியில் உள்ள மீன் ஏல மையத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.
3. ஒப்பந்ததாரர், மீனவர்கள், மீன் விற்பனை செய்யும் பெண்கள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் போன்ற அனைத்து வியாபாரிகள் நலன்களை சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுதந்திரமாகவும் தொழில் ரீதியாகவும் செயல்பட வேண்டும்.
4. ஒப்பந்ததாரர், மொத்த விற்பனையாளர்களுக்கு அனுமதி/பதிவு அட்டையை வழங்க வேண்டும். மேலும் அவர்கள் யாருக்காவது அனுமதி அட்டை வழங்க மறுத்தால் ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால் ஆணையர் முடிவே இறுதியானது.
5. நவீன சுகாதார மீன் அங்காடியில் மீன் விற்பனைக்கு அனுமதியளிக்கப்பட்ட மீன் விற்பனையாளர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள முன்னுரிமை வழங்கப்படும்.மேலும், மேற்படி விற்பனையாளர்களுக்கு மீன் விற்பனை செய்த பின்னர் மற்ற வியாபாரிகளுக்கு மீனை விற்பனை செய்வதற்கும் ஒப்பந்ததாரருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
6. ஒப்பந்ததாரர் மீன் அங்காடி மையத்திற்குள் வாகன ஓட்டத்தை ஒழுங்குபடுத்த டோக்கன்கள் வழங்க வேண்டும் மற்றும் ஏல நேரத்திற்கு பிறகு அதாவது காலை 7.00 மணி முதல் எந்த வாகனத்தையும் மீன் அங்காடி வளாகத்திற்குள் நிறுத்துவதற்கு அனுமதிக்ககூடாது.
7. ஆணையர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் நவீன சுகாதார மீன் அங்காடி மற்றும் மீன் ஏல மையத்தை எல்லா நேரங்களிலும் மேற்பார்வையிட அதிகாரம் உண்டு.
8. வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 மற்றும் பிற சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்பட்ட/தடைசெய்யப்பட்ட மீன்கள் நவீன சுகாதார மீன் அங்காடியில் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.
9. மீன்களின் தரம் மற்றும் அளவைப் பொருத்து புதுச்சேரி மீனவர் துறையால் பரிந்துரைக்கப்பட்ட தேசிய தரநிலைகள் அல்லது தரங்களைப் பயன்படுத்தி மீன் தரம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
10. ஒவ்வொரு நாளும் அதிகாலை 3.00 மணி முதல் காலை 7.00 மணி வரை ஏலம் நடத்தப்படும். கூடுதலாக, ஏல நேரங்கள் தட்பவெப்ப நிலை மற்றும் பரவலான சூழ்நிலைகளைப் பொறுத்து மாற்றத்திற்குட்பட்டது.
11. ஒப்பந்ததாரர் நல்ல தரமான மீன் விற்பனைக்கு பொறுப்பாவார், மேலும் ஏல மையம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வசதிகளை சுகாதாரத்தை பேணுவதற்காக சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
12. ஆணையர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது புதுச்சேரி உணவு பாதுகாப்புத் துறையின் அதிகாரிகளால் மீன்கள் தரச் சோதனைகள் மற்றும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும்.

13. ஒப்பந்ததாரர் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்காத போதெல்லாம் ஆணையர் அவர்கள் ஒப்பந்ததாரருக்கு உரிய வாய்ப்பை வழங்கிய பிறகு, பொதுநலன் கருதி இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய அதிகாரம் உண்டு.
14. ஏல மையத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் மேற்பார்வையும் ஒப்பந்ததாரரிடம் இருக்கும். அவரின் அலுவலர்கள் எல்லா நேரங்களிலும் குறிப்பிட்ட இடத்தின் பயன்பாட்டை பற்றியும் அதன் பழுது நிலை பற்றியும் ஆய்வு செய்யும் உரிமை உடையவர்கள்.
15. ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட எந்த ஒருவருக்கும் இந்த இடத்தை கீழ் குத்தகைக்கு விடவோ அல்லது குறிப்பிட்ட எந்த ஒரு பகுதியையும் வேறு ஒருவர் பயன்படுத்த அனுமதி இல்லை.
16. ஒப்பந்ததாரருக்கு மேற்கூறிய வளாகத்தில் மேல் எவ்வித உரிமையும் இருப்பதாகக் கருதக்கூடாது.
17. ஒவ்வொரு வருடமும் மீன் அங்காடி ஏல காலம் முடியும் முன்பு, அதாவது ஒரு மாதம் முன்னராகவே ஏலம் விடப்படும். மேலும் ஆணையர் அவர்களுக்கு ஒப்பந்தத்தை 3 ஆண்டுகள் வரை நீட்டிக்க அனைத்து அதிகாரமும் உண்டு என்பதை அறியவும், கால நீட்டிப்பு செய்வதாக இருந்தால் நடைமுறையில் இருக்கும் தொகையில் இருந்து ஆண்டுக்கு 10% (பத்து சதவிகதம் மட்டும்) உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும்.
18. ஒப்பந்ததாரர் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகளுக்கான மின்சார நுகர்வு, மேலும் ஜெனரேட்டர் கட்டணம் மற்றும் தண்ணீர் வரி தனியாக செலுத்தப்பட வேண்டும்.
19. ஒப்பந்ததாரர், மீன் அங்காடியில் பொருத்தப்பட்டுள்ள மின் உபகரணங்கள் மற்றும் கட்டடங்களின் பாதுகாப்புக்கு பொருப்பாவார்.
20. ஒப்பந்ததாரர், மீன் அங்காடியில் எவ்வித கட்டட மாற்றங்கள் செய்ய அனுமதி இல்லை. அவ்வாறு செய்ய வேண்டி இருப்பின் ஆணையரின் முன் அனுமதி வேண்டும்.
21. ஒப்பந்ததாரர்களுக்கு மீன் ஏல மையத்தை வேறு ஒரு நபருக்கு கீழ் குத்தகைக்கு விடும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறையை மீறியவராவார். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து அவரை வெளியேற்ற ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும் ஒப்பந்ததாரரின் பாதுகாப்பு வைப்பு தொகையை பறிமுதல் செய்யப்பட்டு ஏல மையத்திற்கு மறுஏலம் வைக்கப்படும்.
22. ஒப்பந்ததாரர், இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் இந்நகராட்சியின் தற்போதைய விதிகளையும் அவ்வப்போது மத்திய/மாநில அரசுகளால் அமல்படுத்தப்படும் விதிகளையும் கடைபிடிக்க வேண்டும்.
23. ஒப்பந்ததாரர் மீன் அங்காடியை மீன் விற்பனைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் வேறு தொழில் செய்வதற்கு ஆணையரின் முன் அனுமதி வேண்டும்.
24. ஒப்பந்ததாரர் ஏலம் முடிந்ததும் மொத்த விற்பனையாளர்கள் விற்கப்படாத மீன்களை மீண்டும் எடுத்துச் செல்ல எவ்வித தடையும் விதிக்கக்கூடாது.

25. ஒப்பந்ததாரர் பெண் சில்லரை வியாபாரிகளை அதிகாலை 3.00 மணி முதல் வளாகத்திற்குள் அனுமதிக்க வேண்டும். மேலும் அவர்களின் பாதுகாப்பிற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
26. ஒப்பந்ததாரர் மீன் ஏல மையத்தை பூட்டி வைக்கவோ அல்லது சேமிப்பு கிடங்காகவோ பயன்படுத்தக்கூடாது.
27. ஆணையர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் எல்ல நேரங்களிலும் வளாகத்திற்கு நுழைந்து அதன் நிலைமையை பார்க்கவும் மேலும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஒப்பந்ததாரர் தடை செய்யக்கூடாது.
28. ஒப்பந்ததாரர் மீன் ஏல மையத்தின் நியாயமான தேய்மானம் காரணமாக ஏற்படும் பழுதை சரிசெய்ய வேண்டும். அத்தகைய பழுது பார்ப்பதற்கான காரணத்தை ஆணையர் அவர்களிடம் முன்கூட்டியே தெரிவித்து அனுமதி பெற வேண்டும் மற்றும் ஆணையரின் முடிவே இறுதியானது.
29. ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் திருப்தி இல்லாமை அல்லது ஒப்பந்ததின் நிபந்தனைகளை மீறுதல் போன்ற காரணங்களுக்காக ஆணையர் அவர்கள் ஒப்பந்ததாரருக்கு உரிய வாய்ப்பை வழங்கிய பிறகு இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு அதிகாரம் உண்டு. மேலும் பாதுகாப்பு வைப்புத்தொகையை பறிமுதல் செய்யப்படும் என்பதை அறியவும்.
30. ஒப்பந்ததாரர் இந்த மீன் ஏல மையத்தை நடத்த முடியாவிட்டால் இந்நகராட்சியால் ஏலத் தொகையை திரும்பத்தர இயலாது என்பதை அறியவும்.
31. இந்த ஒப்பந்ததில் குறிப்பிட்டுள்ள காலக்கெடு முடிவடைதல் அல்லது இந்த ஒப்பந்ததில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவது அல்லது ஏதேனும் விதிகளின் கீழ் அல்லது மீன் ஏல மையத்தை ஒரு மாத காலத்திற்கு பயன்படுத்தாமல் இருந்தால் இந்த மீன் ஏல மையம் முழுமையாக நகராட்சியின் வசமாகிவிடும். மேலும் ஒப்பந்ததாரரின் எந்த ஒரு உடைமையும் ஒரு மாத காலத்திற்குள் உரிமை கோரவிட்டால் ஆணையர் அவர்களால் அத்தகைய உடைமைகளை ஏலம் விடப்பட்டு அந்த தொகையை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய கணக்கில் வரவு வைக்கப்படும்.
32. ஒப்பந்ததாரர், ஒப்பந்தகாலம் முடிவடைந்தவுடன் மீன் ஏல மையத்தை இந்நகராட்சியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மீறினால் பாதுகாப்பு வைப்புத்தொகை பறிமுதல் செய்வதோடு மீன் ஏல மையம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படும். மேலும் ஒப்பந்ததாரர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

கோ.எண்:1818/வருவாய்/உ.ந./MHFM/2024 ஜவகர் நகர், தேதி

**நவீன சுகாதார மீன் அங்காடியில் உள்ள மீன் ஏல அறையை ஏலம் பெறுவதற்கான ஒப்பந்தப் புள்ளி மற்றும் விண்ணப்ப படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தந்தை/கணவர் பெயர் | : | |
| 3. | முகவரி | : | |
| 4. | கைபேசி எண் | : | |
| 5. | பிணை வைப்புத் தொகையின் விபரம் | : | ரூ.1,40,250/- |
| | வங்கியின் பெயர் | : | |
| | வரைவோலை எண் | : | |
| | வரைவோலை தேதி | : | |
| 6. | நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏலத்தொகை | : | ரூ.28,05,000/-- |

7. ஏலம் எடுப்பதற்கான வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் படித்து தெரிந்துகொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு இந்த விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கின்றேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:

தேதி: